# வரலாற்றுப் பூர்வமானவர்

*பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை இயேசு நிறைவேற்றுதல் பற்றி விபரங்களைத் தருகின்ற புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் நம்புவதற்குரியவைகளா? நசரேயத் தச்சராக இயேசு முதல் நூற்றாண்டில் உண்மையிலேயே வாழ்ந்தார் என்பதை இந்த நூற்றாண்டில் ஒருவர் எப்படி அறிய முடியும்? அவரது அற்புதமான வாழ்வின் சரித்திரமானது அக விருப்பத்தின் சிந்தனையாக மட்டுமே இருக்கின்றதா? ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களுடன் அப்படிப்பட்ட நபர் மாம்சத்தில் இருந்ததாகவும், தாங்கள் அவரது மகிமையைக் கண்டதாகவும் உறுதி செய்தார்கள். இருந்தாலும், அவர்கள் மனித குலத்தின் மகிமையுள்ள முழுநிறைவான இலக்கு ஒன்றைக் கற்பனையில் மட்டுமே கண்டவர்களாய் இருந்தார்களா?*

*இயேசுவின் நிரூபணமான வாழ்வு பற்றிய நான்கு சுவிசேஷங்களை தீர்மானமான அவிசுவாசிகள் நுணுகி ஆராய்ந்த பிறகு, இப்பொழுது உள்ளவற்றிலேயே மிகவும் சான்றாதாரமுள்ள வரலாற்றுப் பதிவேடுகளாக நமது காலத்தில் முன் வைத்துள்ளனர்.[1] மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் கற்பனைப் படைப்பான இயேசுவை சுய மோசடியாய்ப் பின்பற்றியவர்கள் மட்டுமே என்று ஒருவர் கருத்துக் கொண்டால், கிறிஸ்தவரல்லாதவர்களின் கூற்றுக்களைக் கவனிக்கையில் அக்கருத்து தவிடு பொடியாகின்றது. ஆதி நூற்றாண்டுகளில் இருந்து கிறிஸ்தவரல்லாதவர்களின் பல மேற்கோள்கள் கிடைப்பதுடன், சில கூற்றுக்கள் இயேசுவைப் பற்றி நடப்பில் உள்ளனவாகவும், அவர் உண்மையிலே வாழ்ந்தார் என்பதை உறுதியாய்ச் செயல்விளக்கப் படுத்துவனவாகவும் உள்ளன.[2]*

## பிளேவியஸ் யோசிப்பஸ்

*பிளேவியஸ் யோசிப்பஸ் என்ற கற்றறிவுள்ள பரிசேயர் ஒருவர் சபை தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார். புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படும் வரையிலும் அவர் வாழ்ந்தார். அவர் ஒரு கிறிஸ்தவரல்ல, ஆனால் இயேசுவின்மேல் அவர் ஏறக்குறைய பயபக்தியுள்ள மரியாதையைக் கொண்டிருந்தார்:*

> *இப்பொழுது ஏறக்குறைய இந்தக் காலத்தில் இயேசு என்ற ஞானமுள்ள மனிதர் இருந்தார், இவரை மனிதர் என்பது சட்டபூர்வமாக சரியென்றால் இது தகும்; ஏனெனில் இவர் அற்புத*

*செயல்கள் செய்பவராக, சத்தியத்தை மனிதர்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளும் வகையிலமைந்த ஒரு போதகராக இருந்தார். இவர் யூதர்கள் பலரையும் புறஜாதியார் பலரையும் தம்மை நோக்கி இழுத்துக் கொண்டார். இவரே கிறிஸ்துவாக இருந்தார். நம்மிடையே இருக்கின்ற முக்கியமான மனிதர்களின் ஆலோசனையின்படி பிலாத்து இவருக்கு சிலுவை மரணத்தண்டனை கொடுத்தார், முதலில் இவர்மீது அன்புகூர்ந்தவர்கள் இவரைக் கைவிட்டு விடவில்லை; ஏனெனில் மூன்றாம் நாளிலே இவர் அவர்களுக்கு மறுபடியும் உயிருள்ளவராகத் தோற்றம் தந்தார்; தெய்வீக தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தபடியே இவரைப் பற்றிய இந்த நிகழ்ச்சிகளும் இன்னும் ஆயிரம் ஆயிரமான அற்புத நிகழ்ச்சிகளும் நடந்தன. இவரிடத்திலிருந்து பெயரைப் பெற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள் என்ற இனக்குழுவினர் இந்நாட்களிலும் இல்லாது போய் விடவில்லை.*[3]

*மேலுள்ள இக்கூற்றில் வார்த்தைகளின் பயன்பாட்டில் ஜாக்கிரதையின்மையும் அதனுடன் இணைந்த பெரும் மதிப்பும் யோசிப்பஸை உறுதியாகவே பண்புறுத்துகின்றன, ஏனெனில் சுவிசேஷ உண்மைகளின்மீது விசுவாசம் என்ற ஆழப்பதியும் கருத்துக்களை அவர் இதில் விட்டுச் சென்றார்.*[4] *இருப்பினும், பின்னாளைய புத்தகம் ஒன்றில் அவரது உண்மையான விசுவாசம்/நம்பிக்கை காணப்படுகின்றது, இது ஒரு திருப்தியாகப் பணியாற்றுகின்றது; அந்த எழுத்தானது இயேசுவை "கிறிஸ்து என்று அழைக்கப்பட்டவர்" என்று குறிப்பிட்டது.*[5]

*இயேசுவின் தெய்வீகத்துவத்தை யோசிப்பஸ் நம்பவில்லை என்பதற்குப் பலத்த சாட்சியம் உள்ளது, ஆனால் நாசரேத்தூர் இயேசு முதல் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று யோசிப்பஸ் நம்பியதற்கு அதே அளவு சமமான பலத்த சாட்சியம் உள்ளது. கிறிஸ்தவ "இனக்குழு"வுக்குப் புறம்பே நிலை நிற்பவர் என்ற வகையில் யோசிப்பஸ்ஸின் வார்த்தைகள், இயேசுவை ஒரு கற்பனைப் படைப்பாகக் கண்ணோக்கும் எவருக்கும் எதிரானதாக உள்ளது.*

## டால்முட்ஸ்

*முதல் ஐந்து நூற்றாண்டுகளில் யூதர்களின் விரிவான எழுத்தாக்கமானது டால்முட்ஸ்* (Talmuds) *என்று அழைக்கப்படுகின்றது (இது மிஷ்னா மற்றும் கெமாரா என்ற இரண்டு பாகங்களாய் உள்ளது). இது இயேசுவைப் பற்றிப் பேசுகின்றது. எதிர்பார்க்கப்படும்படியாகவே இதில் உள்ள குறிப்புகள் மிகக் குறைவாகவும் வெறுப்பு மிக்கதாகவும் உள்ளன; ஆனால் உண்மையில் இல்லாத ஒரு இயேசு என்ற கருத்தை டால்முட்ஸ் மறுக்கின்றது.*[6] *இவை ''ஏலியின் மகளான மரியாளுக்குப் பிறந்த மகனான நாசரேத்தூர் இயேசு''வைப் பற்றிப் பேசுகின்றன.*[7] *அவர் எகிப்துக்குச் சென்றதை இவை எடுத்துரைக்கின்றன மற்றும் அவரது அற்புத வல்லமைகளை உணர்ந்து ஒப்புக் கொள்ளுகின்றன. இருப்பினும், இவை அவரது வல்லமையை, தேவனுடைய நாமத்திற்கான சரியான உச்சரிப்பைத் தேவாலயத்தில் இருந்து திருடிக் கொண்டதால் பெற்றார் என்றோ அல்லது எகிப்திய மந்திர*

வித்தையைக் கையாண்டார் என்றோ குறிப்பிடுகின்றன. இயேசுவைப் பின்பற்றியவர்களின் குறிப்பான சில பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன, அவைகளில் மத்தேயு, ததேயு, பவுனி என்ற பெயருடையவர் மற்றும் நிக்கொதேமு ஆகியவர்களும் உள்ளடங்கும். பஸ்கா அன்று சிலுவையில் அறையப்பட்டதும் விடப்படவில்லை, ஆனால் எல்லாக் குறிப்புரைகளும் இயேசுவின் மீது மந்திரவாதமும் மாயவித்தையும் செய்பவர் என்ற குற்றச்சாட்டை தீய வகையில் மெதுமெதுவாக உட்புகுத்தி பாரமாக்குபவைகளாய் உள்ளன.[8]

ரபீக்கள் இயேசுவை "தூக்கில் இடப்பட்டவன்" என்றும் "கன்னிப் பெண்ணுக்குப் பிறந்தவன்" என்றும் பழிப்புரையாகக் குறிப்பிட்டனர்.[9] மேலும் ரபீக்கள் "gospel" என்ற வார்த்தைக்கு தங்கள் மொழியில் "எல்லைக் கோட்டின் அக்கிரமம்" அல்லது "எழுதப்பட்ட கற்பலகையின் பாவம்" என்ற அர்த்தம் தருகின்ற அவமானப்படுத்தும் சிலேடைச் சொற்களை ஏற்படுத்தினர்.[10] கற்பனைப் படைப்பான இயேசு என்ற கருத்தை அவர்கள் எப்பொழுதாவது கருதியிருந்தால், அவர்களின் தாக்குதல்கள் மாறுபட்டதாய் இருந்திருக்கும் என்பது உறுதி. அவர்கள் ஏற்படுத்திய ஒவ்வொரு அவமானமும் நாசரேத்தூர்த் தச்சர் உண்மையில் இருந்தார் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

## கொர்நேலியு டேசிட்டஸ்

ரோமப் பேரரசில் தலைசிறந்தவரென்று கருதப்பட்ட இன்னொரு வரலாற்றாளர் கொர்நேலியு டேசிட்டஸ் ஆவார். நீரோவின் காலத்தில் (கி.பி. 54-68) ரோமாபுரியில் மூன்றில் ஒரு பகுதி எரிக்கப்பட்டது பற்றி ஏறக்குறைய கி.பி. 110ம் ஆண்டில், இவர் ஒரு விவரிப்பை எழுதினார். 64ல் ஏற்பட்ட "மாபெரும் தீ விபத்திற்கு" நீரோவே காரணமாய் இருந்தார் என்று ரோமர்களில் சிலர் கூறியதால், இவர் அக்குற்றச்சாட்டை மறுத்துரைக்கும் வகையில் இதை எழுதினார். டேசிட்டஸ் தமது அறிக்கையின் ஒரு பாகமாக பின்வருமாறு எழுதினார்:

> ஆகையால், வதந்தியை முற்றிலும் அழித்து விடாமல் ஆனால் பாதிப்பு ஏற்படுத்துவதற்காகக் கும்பலானது கிறிஸ்தவர்கள் என்று பெயரிட்டு அழைத்த மனிதர்களின் வகுப்பாரை நீரோ குற்றவாளிகளுக்குப் பதிலீடாக்கி அவர்களின் குற்றங்களால் ஏற்பட்ட அருவருப்புக்கென்று கொடுமையின் மிக உச்ச கட்டமான மேலான தண்டனையை வழங்கினான். அவர்கள் தங்கள் பெயரைப் பெற்றிருந்த கிறிஸ்து என்பவர் திபேரியு ராயனின் காலத்தில் ஆளுநராய் இருந்த பொந்தியு பிலாத்துவின் தீர்வையின் பேரில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவராயிருந்தார்; அழிவின் இல்லிடமாகிய யூதேயாவில் மட்டுமின்றி ரோமாபுரியிலேயே கேடுண்டாக்கும் மூட நம்பிக்கையானது குறுகிய காலத்திற்கு மேலோங்கியிருந்தது, இங்கு உலகத்தின் பயங்கரமும் வெட்கமும் நிறைந்த விஷயங்கள் ஒன்றிணைந்து இருந்தன.[11]

"கிறிஸ்தவர்கள் என்று பெயரிடப்பட்டிருந்தவர்கள்" மேல் டேசிட்டஸ் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டிருந்தார் என்பதை அவரது எழுத்துக்கள் காண்பிக்கின்றன, ஆனால் "கிறிஸ்து" (Christus) என்பவர் "ஆளுநரான பொந்தியு பிலாத்துவின் தீர்வையினால் மரண தண்டனைக்கு ஆளானார்" என்று (டேசிட்டஸ்) திடமாக நம்பியிருந்ததும் தெளிவாகின்றது.

## C. பிளினியஸ் செக்குந்து

C. பிளினியஸ் செக்குந்து என்பவர் டேசிட்டஸ் சமகாலத்தவரான இன்னொரு ரோம எழுத்தாளரும், பித்தினியாவின் ஆளுநரும் ஆவார். அவர் இதே பெயருடைய புகழ் பெற்ற தமது சிற்றப்பாவிலிருந்து வேறுபடுத்தப் படுவதற்காக "இளைய" பிளினி என்று அடையாளப் படுத்தப்பட்டார். கி.பி. 112ல் இளைய பிளினி ட்ரேஜன் பேரரசருக்குத் தமது மாநிலத்தில் உள்ள கிறிஸ்தவர்களை என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டு எழுதியிருந்தார்.

புறசமயக் கோவில்கள் கை விடப்பட்டு, கிறிஸ்துவின் நாமத்திற்காகக் கிறிஸ்தவர்கள் விருப்பத்துடன் மரணத்தை பெற்றுக் கொண்டிருக்கையில், இயேசுவைப் பற்றி கற்பனைக் கதை "தொற்று நோய்" போல் பரவியது என்று பிளினியை நினைக்கச் செய்வது இயலாததாக இருந்திருக்க வேண்டும். கிறிஸ்தவத்தின் செல்வாக்கினுடைய விரிவைப் பிளினியின் குறிப்புகள் விவரிக்கின்றன: "இந்த மூட நம்பிக்கையின் தொற்று நோயானது நகரங்களின் எல்லைகளில் மட்டுமின்றி, கிராமங்களிலும், நாடு முழுவதிலுமே விரிவாயிற்று."[12]

## சுயூட்டோனியஸ்

டேசிட்டஸ்ஸின் சமகாலத்தவரும் சக வரலாற்றாளருமான சுயூட்டோனியஸ் அவர்கள் கி.பி. சுமார் 49ல் பேரரசாயிருந்த கிலாவுதியுவினால் செயல்படுத்தப்பட்ட ஒரு அழிவு நடவடிக்கை பற்றி கி.பி. சுமார் 120ல் எழுதினார்: "கிறிஸ்துவினால் (Chrestus) தங்களுக்கு ஏற்பட்ட தீமைத்தூண்டுதலினால் யூதர்கள் தொடர்ந்து/நிலையாக தொந்தரவுகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தபடியினால், அவர் (கிலவுதியு ராயன்) அவர்களை (யூதர்களை) ரோமாபுரியிலிருந்து வெளியேறக் கட்டளையிட்டார்."[13] (டேசிட்டஸ் "Christus"[14] என்று அழைத்திருந்தவரை, சுயூட்டோனியஸ் "Chrestus"[15] என்று அழைத்தார்.)

இந்த வெளியேற்றமானது கிலவுதியு ராயனின் ஆட்சிக் காலத்தினுடைய ஒன்பதாம் ஆண்டில் நடைபெற்றதாக ஒரோஸியஸ் என்ற எழுத்தாளர் குறிப்பிட்டார். வெர்னெர் கெல்லர் சுட்டிக் காட்டியபடி, "சிலுவையில் அறையப்பட்டு பதினைந்து முதல் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்டிராத காலத்தில்" ரோமாபுரியில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இருந்தது என்பதை அது அர்த்தப்படுத்துகின்றது.[16]

ரோமாபுரியில் யூதர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில்

இருந்த விசுவாசமற்ற யூதர்கள், கிறிஸ்தவர்களான யூதர்களைத் துன்புறுத்தினார்கள் என்பது உறுதி. அவர்கள் கிலவுதியு ராயன் ஆழ்ந்த வெறுப்புக் கொள்ளும்படியான வெளியரங்கமான பெரும் தொந்தரவை எழுப்பினர். எனவே பேரரசர் அந்த விஷயத்தை யூதத்துவத்தின் உட்பூசல் என்பதாகக் கண்ணோக்கி ஒவ்வொரு யூதரும் ரோமாபுரியை விட்டுச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார். அந்த மகிழ்ச்சியற்ற குழுவில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இருந்தனர். கொரிந்துவில் பவுல், "யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியு ராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும்'' (அப். 18:2) கண்டார். இயேசுவின் மரணத்திற்குப் பின் இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே ரோமாபுரியில் இருந்த ஏராளமான கிறிஸ்தவர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திய இந்த வருத்தத்திற்குரிய நிகழ்ச்சியானது "Chrestus" என்று ஒருவர் இல்லாமல் இருந்திருந்தால் நடைபெற்றிருக்கவே முடியாது. சுயூட்டோனியஸின் குறிப்பானது இயேசுவின் வரலாற்றுத்துவம் பற்றி மறுப்புள்ள மற்றும் வெறுப்புணர்வு மிக்க ஆதார மூலத்திலிருந்து வந்த நிரூபணமாக உள்ளது.[17]

## முடிவுரை

முதல் நூற்றாண்டில் உயிர் வாழ்ந்த, சுவாசித்த, மரித்த நாசரேத்தூர் இயேசுவின் செயல்விளைவானது ஒடுக்கப்பட முடியாதது ஆகும், ஏனெனில் அவர் செய்தது "ஒரு மூலையில் நடந்த காரியமல்ல" (அப். 26:26). கிறிஸ்துவைப் பற்றிய மற்ற எதுவும் தாக்கப்பட்டாலும், அவரது உண்மை இருப்புத்தன்மை ஒப்புக் கொள்ளப்பட்டாக வேண்டும். ''தகவல் அறிவுடைய எந்த ஒரு மனிதரும் நெப்போலியன் போனபார்ட், ஆலிவர் கிராம்வெல், ஜூலியஸ் சீசர்'' அல்லது நாசேரேத்தின் இயேசு போன்றவர்கள் இருந்தனர் என்பதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமளிக்க மாட்டார்கள். ''ஜூலியஸ் என்பவர் வாழ்ந்தார், கால் (பிரான்ஸ்) நாட்டின் மீது யுத்தம் தொடுத்தார் மற்றும் ரோம அரசவையினரால் கொல்லப்பட்டார் என்பவைகள் உண்மையென்றும் அதிகாரப்பூர்வமான வரலாறு என்றும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன; ஆனால் அவைகள் இயேசு வாழ்ந்திருந்தது, யூதேயா மற்றும் கலிலேயாவில் தமது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது மற்றும் கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டது ஆகியவற்றைக் காட்டிலும் தற்காலத்திற்குச் சமீபமானவைகளும் அல்ல, அவைகள் இவைகளைப் போலப் பாதியளவு கூட உறுதிப்படுத்தப்படவும் இல்லை."[18]

" 'கற்பனைக் கிறிஸ்து' முதலிய நவீனக் கோட்பாடுகள் அறிவியல் வரலாற்றாளர்கள் அனைவராலும் மறுக்கப் படுகின்றன" என்று ஃப்ரெடரிக் C. கிரான்ட் அவர்கள் உரிமைகோரினார்.[19] ஒரு விரிவுரையாளர் பின்வருமாறு கூறினார்:

அவர் [இயேசு] ஒருபொழுதும் வாழ்ந்ததில்லை என்றும், அவரது வாழ்வில் விபரங்கள் யாவும் புனைகதைகளே என்றும் யூகிக்கும் செயலானது, சுவிசேஷ வரலாற்றின் இன்றியமையாத கூறுகளை உண்மை என்று ஏற்பதைக்காட்டிலும் அதிக கடினமானதாகவும், வரலாற்றாளரின் பாதையில் அதிகப் பிரச்சனைகளை எழுப்புவதாகவும் இருக்கின்றது.[20]

F. F. புரூஸ் அவர்கள், "சில எழுத்தாளர்கள் 'கற்பனைக் கிறிஸ்து' என்ற நவீனத்துவத்தை வைத்து விளையாட்டுக் காட்டலாம், ஆனால் அவர்கள் வரலாற்று ரீதியான ஆதாரத்தின் அடிப்படையில் அவ்விதம் செய்வதில்லை" என்று கூறினார்.[21]

"புதிய ஏற்பாடு ஒருபோதும் எழுதப்பட்டிராதிருந்தால், பிதாக்கள் தொடர்ச்சியாக மௌனம் காத்திருந்தால், அப்பொழுதும் கூட இந்தப் புறம்பான ஆதார மூலங்களில் இருந்து [அதாவது, அவிசுவாசிகளின் கூற்றுக்களில் இருந்து] கிறிஸ்தவத்தின் மாபெரும் உண்மைகள் எல்லாவற்றையும் சேகரித்துப் பெறும்படியாக நாம் நிர்ப்பந்திக்கப் பட்டிருப் போம்."[22] எனவே, கிறிஸ்தவமானது வரலாற்றுப் பூர்வமான ஆதாரமும் புவியியல் ரீதியான அடிப்படையும் கொண்டதாகும். நிழலாட்டமான கன்ஃபூஸியஸ் அல்லது சந்தேகம் நிறைந்த புத்தர் ஆகியவர்களுக்கு மாறாக இயேசு, ஜூலியஸ் சீஸர் போன்றே உண்மைத் தன்மையுடன் நிலை நிற்கின்றார். "மனுஷகுமாரனை நீங்கள் யாரென்று சொல்லுகிறீர்கள்?" என்ற கேள்வியைப் பற்றிப் பிடிக்கும் ஒருவர் தமது பதிலுக்கு அடிப்படையாக உறுதியான சிலவற்றைக் கொண்டுள்ளார்.

குறிப்புகள்

[1]"புதிய ஏற்பாட்டுப் பதிவேடுகளின் அடிப்படையில் நம்பகத் தன்மையானது" அறைகூவலுக்கு உட்பட்டிருந்த காலம் ஒன்று இருந்தது, "ஆனால் அந்தக் காலம் நீண்டதாகவும், நிரந்தரமான கடந்த காலமாகவும் இருக்கின்றது" (John H. Gerstner, *Reasons for Faith* [New York: Harper & Brothers, 1960], 86). [2]கிறிஸ்தவரல்லாதவர்களின் குறிப்புக்களும் கூட, "வாதத்தை மறுத்துரைக்க உதவலாம், இது 19ம் நூற்றாண்டின் முடிவில் சில விமர்சகர்களால் இயேசு உண்மையில் வாழ்ந்திருந்ததில்லை என்றும், சற்றுக்காலம் மனித உருவில் இப்பூமியில் தோன்றியிருந்த கடவுளைப் பற்றிய விரிவான கற்பனைக் கதையாகவே இயேசுவின் வரலாறு உள்ளது என்று ஒரு கருத்தானது மிக மும்முரமாய்ப் பரப்பப்பட்டது" (*Encyclopaedia Britannica,* 1962 ed., s.v. "Jesus Christ," by Jaroslav Jan Pelikan). [3]Josephus Antiquities 18.3.3. [4]எனவே, யோசிப்பஸ்ஸின் கூற்றானது கிறிஸ்துவுக்கு ஆதரவானதாக உள்ளது மற்றும் இம்முழுப் பகுதியும் ஒரு இடைச் செருகல் என்று பல கல்வியாளர்கள் உறுதிப்படுத்தினர். குறிப்பிட்ட வார்த்தைகள் இடைச் செருகல்களாகும் என்ற முடிவானது குறைந்த அபாயம் உள்ளதென்றாலும் இதே செயல்விளைவை கொண்டதாக உள்ளது. (Joseph Klausner, *Jesus of Nazareth: His Life, Times, and Teaching*, trans. Herbert Danby [New York: Macmillan Co., 1929], 56). இருப்பினும் யோசிப்பஸ்ஸின் எழுத்துக்களில் நடப்பில் உள்ள பிரதிகள் யாவையும் முழுப்

பகுதியையும் கொண்டுள்ளன, மற்றும் இப்பகுதியானது கி.பி. 324 (ஈசுபியஸ்) முதற் கொண்டு மேற்கோள் காட்டப்பட்டு வருகின்றது. ஆசிரியர் கையாண்ட சொற்களின் ஆதாரத்தைப் பொறுத்தமட்டில், இந்தப் பகுதியைப் போலவே யோஸிப்பஸ்ஸின் எழுத்துக்களில் வேறு எந்தப் பகுதியையும் கூட ஒருவர் சுலபமாக மறுதலிக்க முடியும். உணர்வு சார்ந்த காரண அறிவு மட்டுமே இதை நீக்கிப் போட முடியும். The *New York Times* News Service என்ற பத்திரிகையில் பெப்ருவரி 13, 1972ல் எருசலேமின் தேதி வரிசை ஒன்றின் கீழ், யோசிப்பஸ்ஸின் குறிப்புகளின் மாறுபட்ட பகுதியாக அரபுக் கையெழுத்துப் பிரதியொன்றில் பின்வருமாறு காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது: "இந்த வேளையில் இயேசு என்று அழைக்கப்பட்ட ஞானமுள்ள ஒரு மனிதர் இருந்தார். அவரது நடக்கை நன்றாயிருந்தது, மற்றும் அவர் உண்மையுள்ளவர் என்று அறியப்பட்டார். யூதர்கள் மற்றும் பல நாடுகள்/ இனங்களில் இருந்து பலர் அவரது சீஷர்களாயினர். பிலாத்து அவருக்கு மரணத் தீர்வையிட்டார். அவரது சீஷர்களானவர்கள் தமது சீஷத்துவத்தைக் கை விடவில்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின் அவர் தங்களுக்குத் தரிசனமானதாகவும், அவர் உயிருடன் இருப்பதாகவும் அவர்கள் அறிக்கை செய்தனர்; அதன்படி பார்த்தால், ஒருவேளை அவர் அற்புதங்கள் செய்வார் என்று தீர்க்கதரிசிகள் விரிவாய் கூறிய மேசியாவாக இருக்கலாம்." [5]Josephus *Antiquities* 20:9.1 [6]F. F. Bruce, *The New Testament Documents: Are They Reliable?* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 102. இயேசுவின் வரலாற்றுத்துவத்தில் யூதர்கள் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்ததைக் காண்பிக்க புரூஸ் அவர்கள் Klausner என்பவரின் *Jesus of Nazareth* என்ற நூலில் பக். 18ffஐயும், Maurice Goguel அவர்களின் *Life of Jesus* என்ற நூலில் பக். 70ffஐயும் குறிப்பிட்டுக் காண்பித்தார். "இயேசு அல்லது கிறிஸ்து என்ற பெயரை உடைய ஒரு நபர் ஒரு காலத்தில் இருந்தார்" மற்றும், அவர் "திபேரியு ராயனின் காலத்தில் பலஸ்தீனத்தில் சிலுவையில் அறையப்பட்டார்" (Maurice Goguel, *Life of Jesus* [New York: Barnes & Noble, 1933; 3d impression, 1958], 70). [7]Thomas Hartwell Horner, *An Introduction to the Critical Study and Knowledge of the Holy Scriptures* (Philadelphia: E. Littel, 1831), 1:197. [8]Ibid (மேற் குறிப்பிடப்பட்ட நூல்) [9]இயேசு *Ha-Taluy*, "தூக்கிலிடப்பட்டவன்" என்றும் *Ben Pantera* "கன்னிப் பெண்ணின் மகன்" என்றும் அழைக்கப்பட்டார். *Pantera* என்பது *Parthenos* "கன்னி" என்ற கிரேக்க வார்த்தையின் களங்கப்படுத்துப்பட்ட வடிவமாகும் (Ibid.) [10]*Euangelion* "சுவிசேஷம்" என்ற வார்த்தையானது *'Awen-gillayon* அல்லது *'Awon-gillayon* என்று மாற்றப்பட்டது. (Babylonian Talmud, tractate Shabbath, 116a, b, quoted in F. F. Bruce, 102.)

[11]Tacitus *Annals* 15.44, quoted in Bruce, 117. [12]C. Plinius Secundus *Epistles of Pliny* 10:97, quoted in J. W. McGarvey, *Evidences of Christianity*, Part 3 (Louisville: Guide Printing and Publishing Co., 1891), 12-14. [13]Seutonius *Life of Claudius* 25.4, quoted in Bruce, 118. [14]Tacitus *Annals* 15.44, quoted in Bruce, 117. [15]Horner, 1:200. [16]Werner Keller, *The Bible as History* (New York: William Morrow and Co., 1958), 379. [17]ரோமாபுரியின் மாபெரும் தீ விபத்துப் பற்றியும், கிலவுதியுவைத் தொடர்ந்து வந்த நீரோ (64-68), "புதிதான மற்றும் தீங்கு விளைவிக்கும் மூட நம்பிக்கைக்கு அடிமைப்பட்ட கிறிஸ்தவர்கள் என்ற மனித வகுப்பாருக்கு" தண்டனை அளித்துத் துன்புறுத்தியதையும் சுயூட்டோனியஸ் எழுதினார் (*Life of Nero*, 21.2, quoted in Bruce, 118). [18]J. L. Dagg, *The Evidences of Christianity* (Macon, Ga.: J. W. Burke and Co., 1869), 85, 90. [19]*Encyclopedia Americana*, s.v. "Jesus Christ," by Frederick C. Grant. [20]H. G. Wells, in N. B. Hardeman, *Dallas Lectures for 1943* (Dallas: Eugene Smith, 1943), 122. [21]Bruce, 119. [22]Harvey W. Everest, *The Divine Demonstration* (St. Louis: Christian Board of Publication, 1884), 85.